# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **மக்கள் தொகை வெடிப்பு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# மக்கள் தொகை வெடிப்பு

**மக்கள் தொகை - விளக்கம்**

ஒரு நாட்டில் (அ) ஒரு பகுதியில் வாழும் ஒட்டு மொத்த மக்களின் எண்ணிக்கை.

**மக்கள் தொகையை தீர்மானிக்கும் காரணிகள்**

- பிறப்பு விகிதம்
- இறப்பு விகிதம்
- இடப்பெயர்ச்சி
    - வெளிநாட்டில் குடியேறுதல் (வெளிக் குடிப்பெயர்ச்சி)
    - நம்நாட்டில் குடிபுகுதல் (ஊர் குடிப்பெயர்ச்சி)

**பிறப்பு வீதம்**

1. ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்ற வீதத்தை குறிக்கிறது
2. மக்கள் தொகை பெருக்கத்தில் பிறப்பு வீதம் ஒரு நேரடியான மாறுதலை உண்டுபண்ணும்.
3. மக்கள் தொகை பெருக்கத்திற்கு பிறப்பு வீதம் முக்கிய காரணம்.

**பிறப்பு வீதம் கீழ்க்காணும் காரணிகளும் தொடர்பு கொண்டுள்ளது**

1. திருமண வயது
2. குழந்தை பிறப்பு அதிகரிப்பு
3. சமூக பழக்கங்கள் மற்றும் நம்பிக்கை
4. படிப்பறிவின்மை
5. பிறப்பு கட்டுப்பாடு முறைகள் பற்றி அறியாமை

**இறப்பு வீதம்**

1. ஒரு வருடத்தில் 1000 நபர்களில் எத்தனை பேர் இறக்கின்றனர் என்ற வீதத்தை குறிக்கிறது
2. மக்கள் தொகை பெருக்கத்திற்கு மற்றொரு காரணம் குறைவான இறப்பு வீதமும் ஆகும்

**குடிப்பெயர்ச்சி**

1. வெளிக் குடிப்பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்கிறது.
2. உள் குடிப் பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை அதிகரிக்கின்றது.

**நகர நகர்வு**

நகரநகர்வு என்பது மக்கள் பரவலானது கட்டுபடுத்த முடியாத அளவில் நகரின் எல்லைப் பகுதியை சென்று அடைவது.

**காரணங்கள்:**

1. நிலத்தின் குறைந்த விலை
2. வளர்ச்சி திட்ட பணிகளின் வளர்ச்சி
3. மக்களின் வாழ்க்கை தரம் உயர்வு
4. நகரத் திட்டமிடுதலின் குறைபாடு
5. மக்கள் தொகை பெருக்கம்

**மக்கள் தொகை வெடிப்பு**

அச்சுறுத்தக் கூடிய, அதிவேகமான மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தையே மக்கள் தொகை வெடிப்பு என்கிறோம்.

**வெடிப்பிற்கான காரணங்கள்**

**அதிக பிறப்பு வீதம்**

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 1891-1900 | 45.8/1000 |
| 2001 | 25.8/1000 |

இருப்பினும் மக்கள் தொகை 121 கோடியாக உயர்ந்துள்ளது.

**குறைக்கும் வழிமுறைகள்**

1. குடும்ப நலம் பற்றிய விளம்பரம்
2. குடும்ப நலவாழ்வு திட்டம்
3. கருத்தரங்கு

**குறைவான இறப்பு வீதம்**

| ஆண்டு | இறப்பு வீதம் |
|---|---|
| 2001 | 8.5/1000 |

**குறைக்கும் வழிமுறை**

1. சுத்தம் சுகாதார வசதிகள்
2. குழந்தை பிறப்பின்போது பராமரிப்புகள்

**இளவயது திருமணம்**

இந்தியாவில் ஆண்களின் திருமண வயது 21, பெண்களின் திருமண வயது 18, மற்ற நாடுகளின் திருமண வயது 23 முதல் 25, இதனால் மகப்பேறு காலம் அதிகரிக்கிறது, பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

**சமுதாய மற்றும் சமயக் காரணங்கள்**

1. திருமணம் ஒரு இன்றியமையாத சமூகக் கடமையாகும்.
2. குடும்பத்திற்கு ஓர் ஆண் குழந்தை என்ற எதிர்பார்ப்பினால் மக்கள் தொகை அதிகரிக்கிறது.

**வறுமை**

1. குழந்தைகள், வருமானம் ஈட்டக் கூடிய நிலையில் திகழ்கின்றனர்.
2. பள்ளிக்குச் செல்லாமல் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.
3. எனவே வறுமையைச் சமாளிக்க, கூடுதலாக பிறக்கும் குழந்தைகளை வருமான ஈட்டித் தரும் சொத்தாக மக்கள் கருதுவதால், மக்கள்தொகை அதிகரிக்கிறது.

**கல்வியறிவின்மை**

1. இந்திய மக்களில் 26% பேர் கல்வியறிவற்றோர்.
2. மேலும் பெரும்பாலானோர் குறைவான கல்வியறிவு உடையோர்.
3. கல்வியறிவின்மையால், சமூக பழக்க வழக்கம், வறுமை, வேலையின்மை, போன்ற காரணிகள் அதிகரித்து, மக்கள் தொகையை வளர்ச்சி அடைய செய்கிறது.

## மக்கள்தொகை வெடிப்பின் விளைவுகள்

### பொருளாதார வளர்ச்சி பாதிப்பு

பொருளாதார வளர்ச்சிக்கு உழைப்பின் அளிப்பு, அதிகமாக தேவைப்பட்டாலும் நமது மக்கள் தொகை தொடர்ந்து வளர்வதால் பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகிறது.

### உணவுப் பற்றாக்குறை

இந்திய மக்கள் தொகை அதிகரிப்பதால் விவசாய உற்பத்தியில் சமவிகித வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

### உற்பத்தி செய்யாத நுகர்வோர் சுமை

1. மக்கள் தொகை அதிகரிக்கும் போது குழந்தைகள் மற்றும் முதியோரின் எண்ணிக்கையும் உயர்கிறது.
2. குழந்தைகளும், முதியோர்களும் உற்பத்தியில் ஒரு பங்கினையும் வகிக்காமல் பொருள்களை மட்டுமே நுகர்கிறார்கள்.

### தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானம் குறைதல்

1. அதிவேகமாக வளரும் மக்கள் தொகை தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானத்தின் சராசரி வளர்ச்சி வீதத்தை தடை செய்கிறது.
2. நாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பை நிலையாக வளர்ந்து வரும் மக்கள்தொகை நுகர்ந்து விடுகிறது.

### சேமிப்பும், முதலீடும் குறைதல்

1. அதிவேக மக்கள்தொகை வளர்ச்சி சேமிப்பையும் மற்றும் முதலீட்டின் திறனையும் குறைக்கிறது.
2. நாட்டு வருமானம், தலா வருமானம் குறைவாக உள்ளதால் சேமிப்பு பூஜ்ஜியம் ஆகிறது.
3. இதனால் முதலீடு குறைவதுடன், உற்பத்தி திறன் பாதிக்கப்படுகிறது.

### வேலையின்மை (அ) குறை வேலையுடைமை

1. வளரும் மக்கள் தொகை வேலையில்லா திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கிறது.
2. இதனால் நிறைய மக்கள் வேலையில் அமர்த்தப்படாமலும், குறைவான வேலையில் அமர்த்தப்பட்டும் இருக்கிறார்கள்.

**மகளிரின் உழைப்பு வீணாதல்**

1. அடிக்கடி குழந்தை பெறுவதால், உற்பத்தி நடவடிக்கைகளில் பெருமளவு மகளிரால் நீண்ட காலத்தில் வேலை செய்ய இயலவில்லை.
2. இதனால் மனிதவளம் வீணாகிறது, பொருளாதார வளர்ச்சிக் குன்றுகிறது.

**உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவு**

1. மக்கள் தொகைப் பெருக்கமானது, நாட்டு வருமானம், மற்றும் தனி நபர் வருமானத்தைப் பாதிக்கின்றன.
2. மக்களின் வாழ்க்கைதரம் குறைவதால் உற்பத்தி திறன் குறைகின்றது.

**சமூக நலத் திட்டத்தின் மீது அதிகச் செலவு**

மக்கள்தொகை அதிகரிப்பானது, குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன. இதன் காரணமாக மருத்துவ பராமரிப்பு, பொது சுகாதாரம், குடும்ப நலன், கல்வி, வீட்டு வசதி போன்ற சமூக செலவுகளின் தேவையானது அதிகரிக்கின்றன.

**வேளாண்மையில் பின் தங்கிய நிலை**

1. மக்கள் தொகை வளர்ச்சியினால் நிலம் துண்டாடப்படுகிறது.
2. நிலங்கள் மிகச் சிறியதாக இருப்பதனால் இயந்திரமயமான உழவு முறையைக் கையாள முடியாது.

**அரசு மீது நிதிச் சுமை**

1. அதிவேக மக்கள்தொகை அதிகரிப்பு நிதிச்சுமையாக அரசுக்கு அமைகின்றது.
2. சமூக நலத்திட்டங்களுக்காகவும், வறுமையை அகற்றுவதற்காகவும், அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது.
3. மக்கள்தொகை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டால் அரசு நிதியை உற்பத்திக்காக செலவழிக்கக் கூடும்.

**மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் வழிகள்**

**தம்பதிகளின் பாதுகாப்பு வீதம்**

இவ்வீதத்தினை அதிகரிப்பதற்கு குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை கையாளும் தம்பதிகளின் விகிதம் அதிகரிக்க வேண்டும்.

**குழந்தைகளின் இறப்பு வீதம்**

குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் இறக்கும்போது, பொது மக்கள் சிறு குடும்ப நெறியினை பின்பற்ற ஊக்கம் ஏற்படும். எனவே இவ்வீதம் குறைக்கப்பட வேண்டும்.

**நாடு தொழில்மயமாதல்**

1. நிலத்தை சார்ந்திருக்கும் மக்கள்தொகை அழுத்தத்தை குறைக்க வேண்டும்.
2. கிராமப் புறங்களில் குடிசை மற்றும் சிறு தொழில்களை, அதிகபட்ச மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் வளரச் செய்தல் வேண்டும்.
3. இதன் வாயிலாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் போது, மக்கள்தொகை கட்டுப்படுத்தப் படுகிறது.

**பெண்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் கல்வியை அதிகரித்தல்**

1. கல்வி கற்ற பெண்கள், தங்களுடைய குடும்ப அளவினைப் பற்றி அதிகப் பொறுப்பு வாய்ந்த கண்ணோட்டத்தைப் பெற்றுள்ளனர்.
2. சிறு குடும்பத்தின் நன்மைகள் குறித்தும், குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் அறிவதுடன், செயல்படுத்தி குடும்ப அளவைக் குறைக்கின்றனர்.

**காலம் தாழ்த்தி திருமணம் செய்தல்**

1. காலம் தாழ்த்தி, திருமணம் செய்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
2. முன் கூட்டியே திருமணம் செய்வதை கட்டாயம் கட்டுப்படுத்த வேண்டும்.

**சட்ட ரீதியான நடவடிக்கை**

குழந்தைத் திருமணத்தையும் ஒரே சமயத்தில் ஒருவர் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுதலையும் தடை செய்ய சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பொருளாதார நடவடிக்கைகள்:-**

**அதிக வேலை வாய்ப்பு:-**

1. வேலைவாய்ப்பு வசதிகளை கிராம மற்றும் நகர்புறங்களில் அதிகபடுத்த வேண்டும்.
2. பொதுவாக கிராம புறங்களில் மறைமுகமான வேலையின்மை உள்ளது. ஆதலால் கிராம புறங்களில் உள்ள வேலை இல்லா மக்களை நகர்புறங்களில் இடம் பெயர செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதத்தை கண்காணிக்க முடியும்.

**தொழில் துறை மற்றும் வேளாண் துறை வளர்ச்சி :-**

**வேளாண்மை மற்றும் தொழிற்துறை வளர்ச்சியடைதல் :-**

1. வேளாண்மையும் மற்றும் தொழிற்துறையும் முறையாக வளர்ச்சியடைந்தால் அதிக மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
2. கிராம புறங்களில் அதிக மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கு வகையில் குடிசை மற்றும் சிறுதொழில் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைய வேண்டும்.
3. ஒருவரின் வருமானம் உயரும் போது அவரின் வாழ்க்கை தரம் மேம்படும் இதனால் அவர்கள் சிறு குடும்ப விதிமுறையை பின்பற்ற இயலும்.

**வாழ்க்கைத் தரம் :-**

1. உயர்வான வாழ்க்கை தரம் பெருங்குடும்பங்களுக்கு தடையாக அமைகிறது.
2. மக்கள் தங்களின் வாழ்க்கை தரத்தை பராமரிப்பதற்கு சிறுகுடும்பங்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றன.

**நகரமயமாதல் :-**

கிராம புறங்களை காட்டிலும் நகர் புறங்களில் பிறப்பு வீதம் குறைவாக உள்ளது என்பதனை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆதலால் நகரமயமாதல் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**மற்ற வழிகள் :-**

**சட்டத்தின் வழிமுறைகள் :-**

இளவயது திருமணம் மற்றும் பலதார மணம் நடைபெறுவதை கண்டிப்பதற்கு கடுமையான சட்டங்கள் நடைமுறைபடுத்த வேண்டும்.

**சுய கட்டுபாடு :-**

1. வல்லுநர்களின் கூற்றுபடி, சுயகட்டுபாடு என்பது மக்கள் தொகையை கட்டுபடுத்தும் மிகச்சிறந்த வழிமுறையாகும்.
2. இம்முறையானது தனித்துவம் மற்றும் சுகாதாரமான அணுகுமுறையாகும் ஆதலால் மக்கள் இம்முறையை பின்பற்ற வேண்டும்.
3. பிறப்பு விகிதத்தை குறைக்க இம்முறை உதவுகிறது.

**குடும்ப கட்டுபாடு :-**

1. மக்கள் தொகையின் துரித வளர்ச்சியை கட்டுப்படுத்த இது மிகவும் துணைபுரிகிறது.
2. குடும்ப கட்டுபாடு என்பது குடும்ப நபர்களின் எண்ணிக்கையை குறைத்தல் ஆகும்.
3. குடும்ப கட்டுபாடு பிரச்சாரத்தை தேசிய இயக்கமாக மாற்ற வேண்டும்.
4. மக்களுக்கு குடும்ப கட்டுபாடு பற்றிய விழிப்புணர்வு கல்வியை போதிக்க வேண்டும்.
5. வேறுபட்ட வழிமுறைகளில் பிறப்பு வீதத்தின் கட்டுபாட்டு வழிமுறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும்.

**பொழுது போக்கு வசதிகள் :-**

திரைபடம், திரையரங்குகள், விளையாட்டு மற்றும் நடனம் போன்ற பொழுதுபோக்கு வசதிகள் செய்து தரப்பட்டால் பிறப்பு விகிதம் குறைய வாய்ப்பு உள்ளது.

**விளம்பரம் :-**

தொலைக்காட்சி, வானொலி செய்திதாள் போன்ற தகவல் தொடர்பு ஊடகங்களின் மூலம் திட்டமிட்ட குடும்பங்களால் பெரும் நன்மையை படிப்பறிவு இல்லாத பாமரமக்களுக்கு தெரிவிக்கலாம்.

**ஊக்க தொகை :-**

பிறப்பு கட்டுபாட்டு நடவடிக்கை மக்கள் பின்பற்றுவதற்கு அரசாங்கம் ஊக்க தொகை போன்ற வழிமுறைகளை பின்பற்றலாம்.

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு :-**

1. பெண்களுக்கு பல துறைகளில் வேலைவாய்ப்பு மற்றும் ஊக்கதொகை வழங்க வேண்டும்.
2. போட்டி தேர்வுகளில் பெண்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்த வேண்டும்.
3. இதன்மூலம் கற்றல், மருத்துவம், மற்றும் வங்கிகளில் பெண்களின் எண்ணிக்கை உயரும்.

**நகரமயமாதலால் ஏற்படும் சமூக விளைவு:-**

**குடும்ப அமைப்பு :-**

நகரமயமாதலினால் கூட்டு குடும்பம் இப்போது தனி குடும்பமாக மாறுகிறது.

**குடும்பத்தின் அளவு :-**

கடந்த 2 மற்றும் 3 தலைமுறைகளில் குடும்பத்தின் அளவும் மற்றும் சொந்தங்களுக்கு இடையே உள்ள ஈடுபாடு குறைந்து கொண்டே வருகிறது.

**சரி நிகர் குடும்பம் :-**

நகரமயமாதலினால் கணவின் ஆதிக்கம் குறைந்து மனைவிக்கு சம உரிமை வழங்கப்படுகிறது.

**பெற்றோர் மற்றும் குழந்தைகளின் உறவு :-**

1. நகரமயமாதலினால் பெற்றோர் மற்றும் குழந்தை இருவருக்கும் இடையே உள்ள உறவு மேம்படுகிறது.
2. பெற்றோர்கள் குழந்தைகளின் ஆலோசனைகளையும் ஏற்கின்றன.

**சாதி :-**

நகரமயமாதலினால் சாதி வேறுபாடு குறைந்தது பல்வேறுபட்ட சாதியினர் ஓரிடத்தில் தங்கி வாழ முடிகிறது.

**கலப்பு திருமணம் :-**

கலப்பு திருமணம் நகரமயமாதலின் பொதுவான அம்சம்.

**பெண்களின் நிலை :-**

1. கிராமபுற பெண்களை விட நகர்புற பெண்கள் உயர்ந்த நிலைமையில் உள்ளனர்.
2. நகர்புற பெண்கள் அனைவரும் கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர்.
3. சராசரி திருமண வயது நகர்புற பெண்களுக்கு அதிகமாக இருக்கிறது.

**கல்வி மற்றும் எழுத்தறிவு :-**

1. கிராமபுற பகுதிகளை காட்டிலும் நகர்புறத்தில் பெண்கள் எழுத்தறிவு விகிதம் அதிகமாக காணப்படுகிறது.
2. நகர்புற பெண்கள் ஆண்களுக்கு நிகரான கல்வியை கற்றவராக இருக்கின்றனர்.

**இடம் பெயருதல் :-**

கிராமபுற மக்கள் வேலை வாய்ப்பினை தேடி நகர்புறங்களுக்கு இடம் பெயருகின்றனர்.

**கிராம புற வாழ்க்கை :-**

1. நகரமயமாதலினால் கிராமப் புறங்களில் வாழ்க்கையின் தரம் உயர்ந்துள்ளது.
2. நகரமயமாதலினால் கிராமப் புற கட்டமைப்புகள் வளர்ச்சியடைந்துள்ளன.

**நிலையான மக்கள் தொகையை அடைவதற்கான வழி முறைகள் :-**

1. குழந்தை சுகாதார சேவை மற்றும் சுகாதார கட்டமைப்பு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.
2. 14 வயது வரை இலவசக் கல்வி.
3. குழந்தைகளின் இறப்பு சதவீதத்தை 30% க்கு கீழ் கொண்டுவர வேண்டும்.
4. பிரசவத்தின் போது தாயின் இறப்பை கட்டுபடுத்த வேண்டும்.
5. குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசி போட வேண்டும்.
6. திருமண வயது 20 மற்றும் அதற்கு மேல் அதிகரிக்க வேண்டும்.
7. பிறப்பு, இறப்பு மற்றும் திருமண ஆகியவற்றை 100% பதிவு செய்ய வேண்டும்.
8. எய்ட்ஸ் போன்ற தொழு நோயை தடுக்க வேண்டும்.
9. செயல்திட்டம் சிறு குடும்ப திட்டத்தினை ஊக்குவிக்க வேண்டும்.
10. சுய உதவி குழுவை ஊக்குவிக்க வேண்டும்.
11. தொடக்க கல்வியை கட்டாயம் மற்றும் இலவசமாக வழங்க வேண்டும்.
12. பிறப்பு, இறப்பு, திருமணம் பதிவுகளை கட்டாயமாக்க வேண்டும்.

**தேசிய மக்கள் தொகை குழு :-**

1. தேசிய மக்கள் தொகை குழு இந்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது.
2. பிரதம அமைச்சர் இக்குழுவிற்கு தலைமை வகிப்பார்.
3. அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக பணியாற்றுகின்றனர்.
4. இக்குழுவிற்கு கல்வி, சுகாதாரம், சுற்றுசூழல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அதிகாரம் உள்ளது.

## மக்கள் தொகை பற்றிய கோட்பாடுகள் - 3

### மால்தாசின் மக்கள்தொகை கோட்பாடு

1. உணவு உற்பத்தி அதிகரிக்கும் போது மக்கள் தொகையும் அதிகரிக்கும்.
2. மக்கட்தொகை பெருக்க வீதத்திலும் உணவு உற்பத்தி கூட்டல் வீதத்திலும் அதிகரிக்கிறது.
3. கிடைக்கும் உணவுப் பொருள்களின் அளவிற்கேற்ப, இயற்கைத் தடைகள் மற்றும் செயற்கைத் தடைகள் மூலம் மக்கள் தொகையை நிலைப்படுத்தலாம்.

### இயற்கைத் தடைகள்

இவை இறப்பு வீதத்தை அதிகரித்து மக்கள்தொகை வளர்ச்சியை பாதிக்கிறது.

**(எ.கா)**

- வறுமை
- வியாதிகள்
- போர்கள்
- பஞ்சங்கள்

### செயற்கைத் தடைகள்

மக்கள் தொகையைக் குறைக்க மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் செயற்கைத் தடைகள் எனப்படும்.

**(எ.கா)**

- காலந் தாழ்த்திய திருமணம்
- வாழ்க்கையில் கட்டுப்பாட்டுடன் இருத்தல்.

### உத்தம அளவுக் கோட்பாடு

1. மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களுக்கும் அதன் விளைவாக தலா வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் இடையே உள்ளத் தொடர்பினை உத்தம அளவுக் கோட்பாடு விளக்குகிறது.
2. இயற்கை வளங்கள், மூலதனப் பொருள்களின் இருப்பு மற்றும் தொழில்நுட்ப நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற சிறந்த மக்கட்தொகை உத்தம அளவு மக்கள்தொகை எனலாம்.

3. உத்தம அளவு மக்கட்தொகை அளவில் தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும். (அல்லது) தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும் நிலையில் உள்ள மக்கட் தொகையே உத்தம அளவு மக்கட்தொகை ஆகும்.
4. உத்தம அளவை விட மக்கள்தொகை குறைவாக இருப்பின் அது குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு.
5. உத்தம அளவை விட மக்கள் தொகை அதிகமாக இருப்பின் அது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு.

**மக்கள் தொகை வளர்ச்சிக் கட்ட கோட்பாடு**

இக்கோட்பாடு பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும் உள்ள உறவை விளக்குகிறது.

**பிறப்பு வீதம்**

ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்ற வீதத்தை குறிக்கிறது.

**இறப்பு வீதம்**

ஒரு வருடத்தில் 1000 நபர்களில் எத்தனை பேர் இறக்கின்றனர் என்ற வீதத்தை குறிக்கிறது.

**சராசரி வாழ்நாள்**

சராசரி வாழ்நாள் என்பது மக்கள் மொத்தமாக தங்களது சராசரி இறப்பை எட்டும் காலமாக கணக்கிடப்படுகிறது. 2011- மக்கள் தொகை கணக்குப்படி இந்தியாவில் - 65.96. சராசரி ஆயுட்காலம் - 65.96.

**மக்கள் தொகை வளர்ச்சியில் 3 நிலைகள்:**

**<u>முதல் நிலை</u>**

**உயர்ந்த பிறப்பு வீதமும், இறப்பு வீதமும்**

1. நாடு முன்னேற்றம் குறைந்து, பின்தங்கிய நிலையில் இருக்கும்.
2. வேளாண்மை மக்களின் முக்கியத் தொழில்
3. மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து காணப்படும்.

4. இந்த கட்டத்தில் அதிக பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதத்தை சரிகட்டுவதால், மக்கள்தொகை வளர்ச்சி அதிகமாக இல்லை, தேக்கமுற்று காணப்படுகிறது.

**இரண்டாம் நிலை**

1. நாடு முன்னேறும் போது, தொழில் நடவடிக்கைகள் அதிகரித்து, அதிக வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.
2. நாட்டு வருமானம், தலா வருமானம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.
3. உயர்ந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன.
4. இக்கட்டத்தில் உயர்ந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதத்திற்கிடையே வேறுபாடு ஏற்படும்.
5. மக்கள் தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகிறது.

**மூன்றாம் நிலை**

**குறைந்த இறப்பு வீதமும், குறைந்த பிறப்பு வீதமும்**

1. பொருளாதார முன்னேற்றம் காரணமாக சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது.
2. மக்களின் மனப்பான்மை மாற்றமடைகிறது. கல்வியறிவின் காரணமாக, சிறு குடும்ப முறைக்கு மாறுகின்றனர். எனவே பிறப்பு வீதம் குறைகிறது.
3. நல்ல சுகாதார வசதிகள் செயல்படுவதால் இறப்பு வீதம் குறைகிறது.
4. இக்கட்டத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் குறைவாக இருப்பதால் மக்கள்தொகை வளர்ச்சி நிலையாக இருக்கும்.
5. உலக நாடுகள் அனைத்தும் மூன்று நிலைகளையும் கடக்க வேண்டும்.

**மனித மேம்பாடு குறியீடு**

மனித மேம்பாடு குறியீடு என்பது வாழ்க்கை மட்டத்தின் ஒரு முழு அளவாகும். 1977ம் ஆண்டின் மனித வளர்ச்சி அறிக்கையில் மனித வளர்ச்சிக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. "மனித தெரிவுகளை விரிவாக்குவதிலும், மனித நலன்களை உயர்த்துவதிலும் மனித வளர்ச்சியின் மைய பொருளாகும்". மனிதனுக்கு 3 அத்தியாவசிய தெரிவுகள் உள்ளன, அவைகள் முறையே நீண்டகால சுகவாழ்வு, அறிவுத் திறனை

பெற்றுக்கொள்ளுதல், மற்றும் நல்ல வாழ்க்கை தரத்தை பெற்றுக்கொள்ள அவசியமான வளங்களை அடைதல். இத்தகைய தெரிவுகள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்படுகிறது.

1. சுகாதாரத்தின் அடிப்படையில் நீண்டகால சுகவாழ்வு (Healthy Life) மதிப்பிடப்படுகிறது.
2. கல்விப்பரிமாணமானது ஆரம்பக் கல்வியில் சேரும் குழந்தைகள் மற்றும் 25 வயது, அதற்கும் மேற்பட்ட இளைஞர்களின் கல்விநிலையைக் கொண்டு (Knowledge) மதிப்பிடப்படுகிறது.
3. வாழ்க்கைத்தரமானது மொத்த நாட்டு தலா வருமானத்தின் மூலம் (Standard of Living) மதிப்பிடப்படுகிறது.
4. முதல் மனித மேம்பாட்டு அறிக்கையானது 1990ம் ஆண்டு UNDP நிறுவனத்தால், பாகிஸ்தானின் முகஹப்-உல்-ஹக் என்ற பொருளியலறிஞரின் வழிகாட்டுதலின்படி வெளியிட்டது.

**மக்கள்தொகை கணக்கெடுப்பு**

ஒரு குறிப்பிட்ட காலத்தில, ஒரு நாட்டிலுள்ள அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியிலுள்ள அனைத்து மக்களின் பொருளாதார சமூக மற்றும் மரபியல் தொடர்பான புள்ளி விவரங்களைத் திரட்டுவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகும்.

- 10-ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களிடமிருந்து பெறப்படும் (ம) பதிவு செய்யப்படும் தகவல்கள் மக்கள் தொகை கணக்கு எனப்படும்.
- இந்தியாவில் முதலில் 1871-ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. 2011 கணக்கெடுப்பானது 15-வது கணக்கெடுப்பு இதனை இந்தியாவின் பதிவுத் தலைவர் (ம) மக்கள் தொகை கணக்கு ஆணையர் மேற்கொள்வர். 1951-ல் இருந்து மக்கள் தொகை கணக்குச் சட்டம் 1951-ன் படி கணக்கிடப்படுகிறது.

**முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு**

1872 ம் ஆண்டில் மேயோ பிரபு காலத்தில் எடுக்கப்பட்டது.

**முறையான கணக்கெடுப்பு**

1. 1881 ம் ஆண்டு முதல், ரிப்பன் பிரபு காலத்தில் முறையான கணக்கெடுப்பு பத்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது.
2. தற்போது 2011 ஆம் வருடம் மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது.

3. இது 15வது கணக்கெடுப்பு (1881 லிருந்து)
4. சுதந்திரத்திற்குப் பிறகு 7வது கணக்கெடுப்பு.
5. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு நாள் "பிப்ரவரி 9"

**குறிக்கோள்**

1. "நமது மக்கள்தொகை கணக்கெடுப்பு நமது எதிர்காலம்"
2. மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் 50

| | | |
|---|---|---|
| மக்கள் தொகை கணக்கெடுப்பு | - | 2011 (இந்தியா) |
| மொத்த மக்கள் தொகை | - | 1210193422 |
| ஆண்கள் | - | 623724248 |
| பெண்கள் | - | 586469174 |
| மக்கள் அடர்த்தி | - | 382/ 1 சகி மீ |
| பாலின விகிதம் | - | 940 பெண்கள்/ 1000 ஆண்கள் |
| குழந்தை பாலின விகிதம் | - | 914 பெண் குழந்தைகள்/1000ஆண்கள் |
| குழந்தைகள் வளர்ச்சி விகிதம் | - | 17.64% |
| உலக மக்கள்தொகை நாள் | - | "ஜீலை 11" |

**கல்வியறிவு**

1. மொத்த கல்வியறிவு வீதம் - 74.04%
2. ஆண் கல்வியறிவு வீதம் - 82.14%
3. பெண் கல்வியறிவு வீதம் - 65.46%

**மாநிலங்களின் தரவரிசை**

**கல்வியறிவு**

**கல்வியறிவில் முதல் 2 மாநிலம்**/யூ.பி

- கேரளா (93.91%)
- லட்சத்தீவு (92.28%)

**கல்வியறிவில் கடைசி 2 மாநிலம்**

- பிஹார் (63.82%)
- அருணாச்சல பிரதேசம் (66.95%)

**மக்கள் தொகை அடர்த்தி**

**முதல் 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- தேசிய தலைநகர் பகுதி டெல்லி - 11297 பேர் / சகிமீ
- சண்டிகர் - 9252 பேர் / சகிமீ

**கடைசி 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- அருணாச்சல பிரதேசம் - 17 பேர் / சகிமீ
- அந்தமான் நிகோபர் தீவு - 46 பேர்/சகிமீ

**பாலின விகிதம்**

**முதல் 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- கேரளா - 1084
- புதுச்சேரி- 1038

**கடைசி 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- டாமன் டையூ - 618
- தாத்ரா நாகர் ஹவேலி - 775

**மக்கள் தொகை கணக்கெடுப்பின் பயன்கள்**

**கீழ்க்காண் விவரங்களை அறிய இயலும்**

1. மொத்த மக்கள் தொகை
2. ஆண்-பெண் வீதம்
3. ஊரக நகர்ப்புற மக்கள்தொகை
4. வயது பாகுபாடு
5. மக்கள்தொகை அடர்த்தி
6. கல்வியறிவு நிலை
7. நகர்மயமாதல்
8. தொழில்சார் வகைகள்

**இந்திய மக்கள்தொகை வளர்ச்சி**

இருபதாம் நூற்றாண்டு இந்திய மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தை நான்கு நிலையாகப் பிரிக்கலாம்.

| மக்கள்தொகை கணக்கெடுப்பு வருடங்கள் | வளர்ச்சியின் தன்மை |
|---|---|
| 1901-1921 | மக்கள் தொகையின் தேக்கநிலை |
| 1921-1951 | சீரான வளாச்சி |
| 1951-1981 | விரைவான உயர்வளர்ச்சி |
| 1981-2011 | குறைவதற்கான அறிகுறி |

1. 1921 ம் ஆண்டு வரை மக்கள்தொகை வளர்ச்சி குறைவான வீதத்தில் இருந்தது.
2. அதன்பிறகு மக்கள்தொகை மிக வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது.
3. எனவே "1921 - பெரும் பிரிவினை ஆண்டு" என வழங்கப்படுகிறது.

**மக்கள்தொகை கொள்கை**

1. உறுதியான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு நிலையான மக்கள் தொகையை 2045 க்குள் அடைவதையே நீண்டகால நோக்கமாக கொண்டு, இந்திய அரசால் கிபி 2000 பிப்ரவரி மாதத்தில் தேசிய மக்கள் தொகை கொள்கை (National Population Policy) வெளியிடப்பட்டது.
2. வளரும் நாடுகளில் மக்கள்தொகைக் கொள்கையை செயல்படுத்திய முதல் நாடு இந்தியா
3. 1952ல் நாடு தழுவிய குடும்பநலத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

**தேசிய மக்கள்தொகை கொள்கை (2000)**

**குறுகிய கால நோக்கம்**

தேவையான கருத்தடை சாதனங்கள் வழங்கியும், சுகாதார கட்டமைப்பு வசதிகள், சுகாதார பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள் மூலம் குழந்தை பராமரிப்பை மேம்படுத்துதல்.

**நீண்ட கால நோக்கம்**

1. 2045 ம் ஆண்டிற்குள் மக்கள் தொகையை நிலைப்படுத்துதல்.
2. மேலும், மொத்த செழுமை காலத்தை 2010 க்குள் மாற்றி அமைத்தலும் இதன் நோக்கமாகும்.

**மக்கள் தொகையை நிலைப்படுத்துவதற்கான முறைகள்**

ஒரு நிலையான மக்கள்தொகையை 2045 க்குள் அடைய கீழ்க்கண்ட வழிகளை தேசிய மக்கள்தொகை கொள்கை கூறுகிறது.

- குழந்தைகள் இறப்பு வீதத்தை 100000 குழந்தைகளுக்கு 30க்கு கீழ் குறைத்தல்.
- மகப்பேறு காலத்தில் இறக்கும் தாய்மார்கள் வீதத்தை 100000 குழந்தைகளுக்கு 100 க்கும் கீழ் கொண்டு வருதல்.
- உலக அளவில் நோய் தடுப்பு முறை
- காலந்தாழ்த்தி திருமணத்தை ஊக்குவித்தல்
- 80% மகப்பேறானது, முறையான மருந்தகம் மருத்துவமனை மற்றும் மருத்துவ நிறுவனங்கள் முறையான பயிற்சி உடைய பணியாளர்கள் மூலம் நடைபெறச் செய்தல்.

இதனை செயல்படுத்த "தேசிய மக்கள்தொகை குழு" பிரதம மந்திரி தலைமையிலும், மாநில குழு, முதலமைச்சர்கள் தலைமையிலும் தொடங்கப்பட்டு செயல்படுகிறது.

**மக்கள்தொகை கணக்கெடுப்பு -2011 (தமிழ்நாடு)**

| | | |
|---|---|---|
| மொத்த மக்கள் தொகை | - | 7,21,38,958 |
| ஆண்கள் | - | 3,61,58,871 |
| பெண்கள் | - | 3,59,80,087 |
| மக்கள் அடர்த்தி | - | 555 |
| பாலின விகிதம் | - | 995 பெண்கள்/1000 ஆண்கள் |
| குழந்தைகள் பாலின | - | 946 பெண் குழந்தைகள் விகிதம்/1000 ஆண் |
| குழந்தைகள் வளர்ச்சி | - | 15.60% விகிதம் |

**கல்வியறிவு**

| | | |
|---|---|---|
| மொத்த கல்வியறிவு சதவீதம் | - | 80.33% |
| ஆண்கள் கல்வியறிவு | - | 86.81% |
| பெண்கள் கல்வியறிவு | - | 73.86% |

**குடும்ப கட்டுபாடு திட்டத்தின் சிரமம்:**

**வறுமை :-**

1. அதிகபட்ச இந்திய மக்கள் வறுமையில் வாழ்கின்றனர்
2. இதனால் குடும்ப கட்டுபாடு செய்வதற்கான செலவினங்களை அவர்களால் கொடுக்க முடியவில்லை.
3. வருமானத்திற்காக இவர்கள் அதிக குழந்தைகளை பெற்றெடுக்கின்றனர்.

**எழுத்தறிவின்மை :-**

கல்வியறிவின்மையால் குடும்பகட்டுபாட்டின் முக்கியத்துவத்தை உணர முடியவில்லை.

**Fatalist :-**

இறைவனின் வரம் என்று நினைத்து அதிக குழந்தைகளை பெற்றெடுக்கின்றனர்.

**மத எதிர்ப்பு :-**

குடும்பகட்டுபாடு செய்வது மதத்திற்கு எதிரானது என்று அதனை செய்ய மறுக்கின்றனர்.

**பணப்பற்றாகுறை :-**

குடும்ப கட்டுபாடு பற்றிய விழிப்புணர்வை கொடுப்பதற்கு போதுமான பணவசதி இல்லை.

**மலிவான மற்றும் பயனுள்ள வழிமுறைகள் :-**

எளிய மற்றும் பயனள்ள குடும்பாடு கட்டுப்பாடு செய்வதற்கான போதிய வழிமுறைகளை கண்டறிய ஆராய்ச்சி மையங்கள் இல்லை.

**பயிற்சி பெற்ற ஊழியர்கள் பற்றாகுறை :-**

1. ஒவ்வொரு 10,000 மக்களுக்கு 2- மருத்துவர்களே உள்ளனர்.
2. இதனால் தான் குடும்ப கட்டுபாட்டின் செயல்திறன் குறைந்துள்ளது.

**வினாக்கள்**

1. மக்கள் தொகையைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
2. மக்கள் தொகை வெடிப்பின் விளைவுகளை விளக்குக.
3. மக்கள் தொகைப் பற்றிய கோட்பாடுகள் பற்றி குறிப்பு வரைக.